**அக்டோபர் – 17**

# TNPSC துளிகள்

- ஐதராபாத்தில் உள்ள கோண்டாபூரில் தொழில்நுட்ப சில்லு புத்தாக்கத் திட்டத்தின் (T-Chip) மூலம் இந்தியாவின் முதல் குறைகடத்தி நுட்பம் சார் புத்தாக்க அருங்காட்சியகமானது திறந்து வைக்கப்பட்டது.
- அமெரிக்காவின் தலைமையிலான போர் நிறுத்தத்திற்குப் பிறகு, ஹமாஸ் அமைப்பு டோக்முஷ் குலத்தைச் சேர்ந்த 52 போராளிகளை வன்முறையின் நடவடிக்கையில் கொன்றது.
- ஷாருக்கான் 1.4 பில்லியன் டாலர் (12,490 கோடி ரூபாய்) நிகரச் சொத்து மதிப்புடன் உலகின் பணக்கார நடிகர் என்றப் பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஜப்பானிய நகரமான டோயோகே, அந்நாட்டு மக்களின் குடிமக்களின் திரைப் பயன்பாட்டு நேரத்தை ஒரு நாளைக்கு இரண்டு மணிநேரமாகக் கட்டுப்படுத்தும் ஒரு உள்ளூர் அவசரச் சட்டத்தினை இயற்றியுள்ளதன் மூலம், திறன் பேசிகளின் சார்பு நிலையைக் குறைப்பதை அதிகாரப்பூர்வமாக ஊக்குவிக்கும் முதல் நகரமாக மாறி உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள ஒன்பது முக்கிய நிறுவனங்கள் பாதுகாப்பான, ஒன்றோடொன்று இணைந்து இயங்கக் கூடிய மற்றும் சமமான 6G சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான டெல்லி பிரகடனம் எனப்படும் ஒரு முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- சென்னையில் உள்ள சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் மௌசம் திட்டத்தின் கீழ் நகர்ப்புற சோதனைத் தளம் திறக்கப்பட்டது.
  - புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனத்தின் (IITM) ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்தத் தளமானது, நிகழ்நேர வானிலைக் கண்காணிப்புக்கான கருவிகளைக் கொண்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புத்தொழில் நிறுவனங்கள் குறித்த SPC அறிக்கை

- 'தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களுக்கான சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பிலான மாநிலத் திட்டமிடல் ஆணையத்தின் (SPC) அறிக்கையானது முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
- பங்கேற்பை அதிகரிப்பதற்காக மாநில அரசின் நிதித் திட்டங்களுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் விண்ணப்ப செயல்முறையை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றை இது பரிந்துரைத்தது.
- விழிப்புணர்வு இல்லாமை மற்றும் சிக்கலான நடைமுறைகள் காரணமாக தற்போது குறைந்த பதிவால் பாதிக்கப்பட்டுள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கான சந்தை அணுகலை மேம்படுத்துவதை இது வலியுறுத்தியது.
- திறமைகளின் சூழல் அமைப்பை வலுப்படுத்துதல், ஆதரவு அமைப்புகள், சமூக மற்றும் இடஞ்சார்ந்த உள்ளடக்கம் மற்றும் நிலைத் தன்மையை ஒருங்கிணைத்தல் ஆகியவை முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன.
- செயல்பாட்டு நடைமுறைகளின் பயன்திறனை அதிகரிப்பதற்காக ஒழுங்குமுறை செயல்முறைகளை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் புத்தொழில்களின் தோல்விகளை சரி

செய்து ஏற்றல் ஆகியவற்றை இந்த அறிக்கை பரிந்துரைத்தது.

- கல்விசார் காப்பு மையங்கள், அரசு நிதியுதவி மற்றும் பொது கொள்முதல் ஆகியவை வெற்றிக்கு வழி வகுத்துள்ளன என்பதை அறிக்கை எடுத்துக்காட்டியதோடு, உற்பத்தி சார் புத்தொழில் நிறுவனங்களுக்கான நிதி அணுகல், திறமை தக்கவைப்பு மற்றும் உள்கட்டமைப்புகளின் கிடைக்கும் தன்மை ஆகியவற்றில் தொடர்ந்து எழும் சவால்களைக் குறிப்பிட்டும் காட்டியது.



## தமிழ்நாட்டிற்கான புதிய ரேடார்கள்




- தமிழ்நாடு அரசானது, எதிர்வரும் ஆண்டுகளில் முன் எச்சரிக்கையின் துல்லியத்தினை மேம்படுத்துவதற்காக அதிக வானிலை ரேடார்களைப் பெற திட்டமிட்டது.
- தற்போதுள்ள S-அலைவரிசை மற்றும் X- அலைவரிசை அமைப்புகளுடன் சேர்த்து, சென்னைக்கு கூடுதலாக மூன்று X- அலைவரிசை ரேடார்கள் பெறத் திட்டமிடப்பட்டது.
- இந்தியா முழுவதும் 100–120 வானிலை ரேடார்கள் நிறுவும் தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் தளங்கள் அடையாளம் காணப்பட்டன.
- இந்த முன்னெடுப்பானது, பருவநிலை மாற்றம் மற்றும் நகரமயமாக்களின் தாக்கங்களால் ஏற்படும் முன் எச்சரிக்கை சார்ந்த பிழைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

## தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம்





- கரூர் கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரங்கல் தெரிவித்து, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றம் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- அந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சபை ஒரு கணம் மௌன அஞ்சலி செலுத்தியது.
- கேரள முன்னாள் முதல்வர் V. S. அச்சுதானந்தன், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஷிபு சோரன், நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன், மூத்த மத்திய புலனாய்வுப் பிரிவு தலைவர் சுதாகர் ரெட்டி, இந்திய ஆட்சிப் பணி அதிகாரி பீலா வெங்கடேசன் ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானங்களையும் சட்டமன்றம் நிறைவேற்றியது.
- அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (அதிமுக) சட்டமன்ற உறுப்பினர் T. K. அமுல் கந்தசாமியின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் தனித் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.


# தேசியச் செய்திகள்

## கிரு நீர்மின் நிலையம்

- ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் நதியில் 624 மெகாவாட் திறன் கொண்ட கிரு நீர்மின் நிலையமானது கட்டுமானத்தில் உள்ளது.
- இந்த நிலையமானது, ஜம்மு காஷ்மீரின் நீர்மின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான சிந்து நதிப் படுகை மேம்பாட்டு உத்தியின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டமானது, வடக்கு மின்கட்டமைப்பிற்கு கணிசமாகப் பங்களிக்கும் மற்றும் பிராந்திய எரிசக்தி பாதுகாப்பை ஆதரிக்கும்.
- பக்கல் துல், குவார் மற்றும் கீர்த்தாய் ஆகியவற்றுடன் செனாப் பள்ளத்தாக்கில் உள்ள நான்கு பெரிய நீர்மின் நிலையங்களில் கிருவும் ஒன்றாகும்.




## இந்தியாவின் முக்கியப் புள்ளி விவரங்கள் அறிக்கை 2023





- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் 2.52 கோடி ரூபாய் பிறப்புகள் பதிவானது, இது 2022 ஆம் ஆன்டில் பதிவானதை விட சுமார் 2.32 லட்சம் குறைவாகும்.
- 2023 ஆம் ஆண்டில் 86.6 லட்சம் இறப்புகள் பதிவாகின, இது 2022 ஆம் ஆண்டில் பதிவான 86.5 லட்சம் இறப்புகளிலிருந்து ஓரளவிலான அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில், பிறப்பின் போதான மிகக் குறைந்த பாலின விகிதம் 899 ஆகவும், அதைத் தொடர்ந்து பீகார் 900 ஆகவும், தெலுங்கானா 906 ஆகவும், மகாராஷ்டிரா 909 ஆகவும், குஜராத் 910 ஆகவும், ஹரியானா 911 ஆகவும், மிசோரம் 911 ஆகவும் பதிவாகியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல், பீகார் மாநிலத்தில் மிகக் குறைந்த பாலின விகிதம் பதிவாகி வருகிறது.
- 1,085 என்ற விகிதத்தில் அருணாச்சலப் பிரதேசத்தில் அதிக பாலின விகிதம் பதிவாகி உள்ளது.
- அதைத் தொடர்ந்து நாகாலாந்து மாநிலத்தில் 1,007 ஆகவும், கோவாவில் 973 ஆகவும், லடாக் மற்றும் திரிபுராவில் முறையே 972 ஆகவும், கேரளாவில் 967 ஆகவும் பதிவாகி உள்ளன.
- மொத்தப் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளில் மருத்துவமனைகளில் பதிவான

பிறப்புகளின் பங்கு 2023 ஆம் ஆண்டில் 74.7% ஆகும்.


- 2023 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்தப் பிறப்பு பதிவு 98.4% ஆக இருந்தது.

## Mappls செயலி




- Mappls என்பது இந்தியாவினால் உருவாக்கப்பட்ட ஒரு மேட்-இன்-இந்தியா வழி செலுத்தல் செயலியாகும் என்பதோடு தற்போது இது இந்திய அரசாங்கத்தினால் அதிகாரப் பூர்வமாக ஆதரிக்கப் படுகிறது.
- இந்தச் செயலியானது, சந்திப்பு பகுதிகளின் முப்பரிமாணக் காட்சிகள், துல்லியமான வீட்டு முகவரி வழிசெலுத்தல், நேரடிப் போக்குவரத்து தகவல்கள், வேக எச்சரிக்கைகள் மற்றும் கட்டணச் சேமிப்பு கணிப்பானை வழங்குகிறது.
- வானிலை மற்றும் காற்று தரக் குறியீட்டு (AQI) தரவை உள்ளடக்கிய மற்றும் இந்திய சாலைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள Mappls செயலி பல இந்திய மொழிகளில் இயங்குகிறது.

## விஸ்வாஸ் திட்டம்



- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) நிலுவைத் தொகை தொடர்பான வழக்குகளைக் குறைப்பதை விஸ்வாஸ் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாதத்திற்கு 1% என்ற நிலையான விகிதத்தினை நிர்ணயிப்பதன் மூலம் விதிமீறல் இழப்பீடுகளை நியாயப்படுத்துகிறது.
- இந்தத் திட்டத்தில் இரண்டு மாதங்கள் வரையில் தவணை செலுத்தாதவர்களுக்கு 0.25% மற்றும் நான்கு மாதங்கள் வரையில் தவணை செலுத்தாதவர்களுக்கு 0.50% என்ற தரப் படுத்தப் பட்ட விகிதம் அடங்கும்.
- இது 14B வது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்குகள், முடிவு செய்யப்பட்ட ஆனால் செலுத்தப்படாத ஊதியங்கள் மற்றும் தீர்ப்புக்கு முந்தைய வழக்குகளை உள்ளடக்கியது.
- ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் இந்தத் திட்டமானது, மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்படக் கூடியது.

## ஸோஹோ மின்னஞ்சல் தளம்





- கடந்த ஆண்டில் சுமார் 12 லட்சம் மத்திய அரசு மின்னஞ்சல் கணக்குகள் தேசிய தகவல் மைய (NIC) தளத்திலிருந்து ஸோஹோவின் தளத்திற்கு மாற்றப் பட்டன.
- இந்த நடவடிக்கையானது, ஊழியர்கள் பொது வெளி மூலக் கருவிகளைப் பயன்படுத்துவதை தடுப்பதையும், உள்நாட்டு மென்பொருளைப் பயன்படுத்தி தரவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- மின்னஞ்சல் தளங்களின் பெயர்கள் "gov.in" மற்றும் "nic.in" என மாறாமல் இருந்தன, ஆனால் பின்தள ஏற்பு அமைப்புகள் மற்றும் செயலாக்கம் ஆனது ஸோஹோ நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது.
- மின்னஞ்சல் மற்றும் அலுவலக உற்பத்தித் திறன் சேவைகளை கையாள்வதற்காக 2023 ஆம் ஆண்டில் ஸோஹோ நிறுவனத்திற்கு ஏழு ஆண்டு கால ஒப்பந்தம் வழங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பானது, குறிப்பாக 2022 ஆம் ஆண்டில் டெல்லியில் உள்ள AIIMS நிறுவனத்தில் நடைபெற்ற இணையவெளித் தாக்குதலுக்குப் பிறகு இணையவெளிப் பாதுகாப்பு சார்ந்த சிக்கல்களுக்கு நடவடிக்கை எடுக்கும் விதமாக மேற்கொள்ளப்

பட்டது.

- ஸோஹோவிற்கான அமைச்சர்களின் தனிப்பட்ட மின்னஞ்சல் இடம்பெயர்வு ஆனது தன்னார்வ அடிப்படையில் செய்யப் பட்டது அதே நேரத்தில் அதிகாரப்பூர்வத் தகவல் தொடர்பானது NIC தளத்தின் கீழ் தொடர்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஃபோமோஃப்ளேஷன்




- ஃபோமோஃப்ளேஷன் என்பது நுகர்வோர் உளவியல் மற்றும் திடீர் விலை உயர்வுக்கு வழி வகுக்கின்ற விநியோக நெருக்கடிகள் ஆகியவற்றினால் உருவாகும் தவற விடப் படும் என்ற பயத்தினால் இயக்கப்படும் பணவீக்கத்தைக் குறிக்கிறது.
- "தவற விடப்படும் என்ற பயம்" மற்றும் "பணவீக்கம்" ஆகியவற்றை இணைப்பதன் மூலம் இந்த சொல் உருவாக்கப்பட்டது.
- பொருளாதார நிலைமைகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டதை விட விலைகள் வேகமாக உயர்ந்த சூழ்நிலைகளை இது விவரித்தது.
- 2025 ஆம் ஆண்டில், நுழைவு இசைவுக் கட்டணங்களின் அதிகரிப்பு சர்வதேச பயணிகளிடையே பயத்தினைத் தூண்டியது, இதனால் கடைசி நிமிட விமான முன் பதிவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டது.
- இந்த திடீர் தேவையானது பயணச் சீட்டு விலைகளை வழக்கமான கட்டணத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக உயர்த்தியது.
- 2022 ஆம் ஆண்டில், பொருளாதார நெருக்கடியால் தூண்டப்பட்ட எரிபொருள் பற்றாக் குறையானது பயத்தினால் தூண்டப்பட்ட கொள்முதலுக்கு வழி வகுத்தது என்பதோடு இது எரிபொருள் விலைகளை மேலும் அதிகரித்தது.
- பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களிலும் இதே போன்ற பயத்தால் இயக்கப்படும் கொள்முதல் நடவடிக்கை காணப்பட்டது, இதில் பற்றாக்குறையானது பதுக்கல் மற்றும் விலை உயர்வுக்கு வழி வகுத்தது.
- பருப்பொருளாதார காரணிகளால் ஏற்படும் வழக்கமான பணவீக்கத்தைப் போல அல்லாமல், ஃபோமோஃப்ளேஷன் நுகர்வோர்களின் எதிர்வினைகள், ஊடகங்களின் தாக்கங்கள் மற்றும் தேவை எதிர்பார்ப்பு ஆகியவற்றில் வேரூன்றியுள்ளது.

## இந்தியாவின் சில்லறை பணவீக்கம் – செப்டம்பர் 2025

- இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 1.54% ஆகக் குறைந்தது என்ற நிலையில் இது கடந்த 8 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைவான பண வீக்கமாகும்.
- இது 2025 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட பணவீக்கக் குறைப்புப் போக்கை தொடரும் விதமாக, ஆகஸ்ட் மாதத்தில் பதிவான 2.07% என்ற அளவிலிருந்து ஏற்பட்ட சரிவைக் குறிக்கிறது.
- உணவு மற்றும் பானங்கள் பணவீக்கம் 1.4% ஆகக் கடுமையாக வீழ்ச்சியடைந்ததால், நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) பணவீக்கம் ஆனது, 99 மாதங்களில் இல்லாத அளவிற்குக் குறைந்த அளவை எட்டியது.
- இது போன்ற ஒரு சூழலிலும், தங்கம் மற்றும் வெள்ளி விலைகள் அதிகரித்ததன் காரணமாக, பல்வேறு பொருட்களுக்கான பணவீக்கம் 5.35% ஆக உயர்ந்தது.
- 2025 ஆம் ஆண்டில் பணவீக்கம் 2 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பது இரண்டாவது முறையாகும் என்பதோடு இது குறைந்த விலை நெருக்கடியைக் குறிக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மாலத்தீவில் மும்மை ஒழிப்பு

- தாயிடமிருந்து குழந்தைக்கு ஹெபடைடிஸ் B தொற்று பரவுவதை (EMTCT) நீக்கியதற்காக மாலத்தீவினை உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளது.
- மாலத்தீவுகள் உலகின் முதல் அங்கீகரிக்கப்பட்ட மூன்று நோய்களின் ஒழிப்பை நிறைவு செய்து 2019 ஆம் ஆண்டில் HIV மற்றும் சிபிலிஸின் EMTCT தொற்று நீக்கத்திற்கான WHO அங்கீகாரத்தினை ஏற்கனவே பெற்றிருந்தன.
- மாலத்தீவில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பைப் பெறுகிறார்கள் மற்றும் எச்.ஐ.வி, சிபிலிஸ் மற்றும் ஹெபடைடிஸ் B ஆகிய தொற்றுகள் உள்ளனவா என்று பரிசோதிக்கப்படுகிறார்கள்.
- நாட்டில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்ட புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகள் சரியான நேரத்தில் பிறப்பின் போதான ஹெபடைடிஸ் B தொற்றுத் தடுப்பூசித் தவணைகள் மற்றும் முழு தடுப்பூசி பாதுகாப்பைப் பெறுகிறார்கள்.

- அந்நாட்டில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் எச்.ஐ.வி அல்லது சிபிலிஸுடன் எந்த குழந்தைகளும் பிறக்கவில்லை என்பதோடு மேலும் 2023 ஆம் ஆண்டின் தேசியக் கணக்கெடுப்பில் பள்ளி செல்லும் வயதிலான குழந்தைகளிடையே ஹெபடைடிஸ் B தொற்று சுழியாகக் கண்டறியப்பட்டது.




## த்ரிஷ்டி செயற்கைக் கோள்




- விண்வெளி தொழில்நுட்ப நிறுவனமான கேலக்ஸ்-ஐ த்ரிஷ்டி செயற்கைக் கோளினை விண்ணில் ஏவ உள்ளதாக அறிவித்தது.
- இது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட உலகின் முதல் பல் உணர்வுக் கருவிகள் கொண்ட புவி கண்காணிப்பு (EO) செயற்கைக்கோளாக இருக்கும்.
- 160 கிலோகிராம் எடை கொண்ட த்ரிஷ்டி செயற்கைக் கோள் இந்தியாவின் மிகப் பெரிய தனியார் செயற்கைக்கோள் ஆகும்.
- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 1.5 மீட்டர் என்ற மிக உயர்ந்த தெளிவுத் திறனைக் கொண்டிருந்தது.

- இந்தச் செயற்கைக்கோள் ஆனது சிந்தட்டிக் அப்பர்ச்சர் ரேடார் (SAR) மற்றும் உயர் தெளிவுத் திறன் கொண்ட ஒளியிழை உணர்வுக் கருவிகளை இணைத்து அனைத்து வானிலை, பகல் மற்றும் இரவு நேர புவிக் கண்காணிப்பு தரவை வழங்கியது.
- எல்லைக் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, வேளாண்மை, உள்கட்டமைப்பு கண்காணிப்பு மற்றும் நிதி மதிப்பீடு போன்ற பயன்பாடுகளில் அரசாங்கங்கள், பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் தொழில் துறைகளை ஆதரிப்பதை இந்த செயற்கைக் கோள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வன் ரக்சக் திட்டத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு




- இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) ஆனது அபுதாபியில், Guardians of the Wild: Supporting India's Frontline Forest Staff என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- 2000 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் தங்கள் கடமையின் போது கொல்லப் பட்ட அல்லது காயமடைந்த 540 இந்திய வனச் சரகர்களின் கதைகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- வன் ரக்சக்ஸ் என்று அழைக்கப்படும் இந்தியாவின் வனச்சரகர்கள், நாடு முழுவதும் 1,100க்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் பல்வேறு வன வாழ்விடங்களைப் பாதுகாக்கின்றனர்.
- முன்னணி வன ஊழியர்களை வலுப்படுத்துவதற்காக, WTI ஆனது 2000 ஆம் ஆண்டில் IFAW (சர்வதேச விலங்கு நல நிதியம்) ஆதரவுடன் வன் ரக்சக் திட்டத்தை (VRP) தொடங்கியது.

## சௌனா புக்கு சூலு

- அருணாச்சலப் பிரதேசத்தின் லெபராடா மாவட்டத்தில் உள்ள பசாரில் 'சௌனா புக்கு சூலு' என்ற பிகோனியாவின் புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கண்கவர் சிவப்பு இலைகளைக் கொண்டுள்ள இது துணை முதல்வர் சௌனா

மெய்னின் நினைவாக "மகத்தான சிவப்பு" என்று பொருள்படும் 'சௌனா புக்கு சூலு (ஆர்யரக்தா)' என்று பெயரிடப்பட்டுள்ளது.

- ❖ பிகோனியாக்கள், 1,800க்கும் மேற்பட்ட நீடித்து வாழும் பூக்கும் தாவரங்களைக் கொண்ட பிகோனியாசி இனத்தைச் சேர்ந்தவையாகும்.
- ❖ இந்தத் தாவரங்கள் ஈரப்பதமான பகுதி வெப்பமண்டல மற்றும் வெப்ப மண்டலக் கால நிலைகளில் காணப் படுகின்றன மற்றும் நிழல், ஈரப் பதமான சூழல்களில் செழித்து வளர்கின்றன.




## பல்லுயிர் வளங்காப்புத் திட்டம்




- ❖ இந்திய சமூக நலன் மற்றும் மேம்பாட்டுச் சபையானது (ISWDC), நீலகிரி பிரிவு

வனத்துறையுடன் இணைந்து, நீலகிரியின் நடுகானியில் ஒரு பல்லுயிர் வளங்காப்புத் திட்டத்தை நிறைவு செய்தது.

- இந்தத் திட்டமானது, நடுகானிப் பகுதியில் பசுமைப் பரவலை மேம்படுத்துவதையும் பூர்வீக சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, கூடலூர் வனப் பிரிவில் அமைந்துள்ள நடுகானியின் பால்மேடு பகுதியில் 100 பூர்வீக மரக்கன்றுகள் நடப்பட்டன.
- நடுகானியில் தரமிழந்த வன நிலத்தை மீட்டெடுப்பது, தாவர அடர்த்தியை அதிகரிப்பது மற்றும் மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையில் அமைதியான சக வாழ்வை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## CM விமான முன்னெடுப்பு




- அசாம் அரசானது, ஜப்பானில் மொழிப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக முதலமைச்சரின் உலகளாவிய மனிதத் திறமைக்கான வெளிநாட்டு மொழிகள் முன்னெடுப்பினைத் (CM-FLIGHT) தொடங்கியது.
- CM-FLIGHT அசாம் இளைஞர்களை ஜப்பானின் குறிப்பிட்ட திறமையான பணியாளர் (SSW) நுழைவு இசைவுச் சீட்டுத் திட்டத்துடன் இணைக்கிறது.
- பயிற்சி, நோக்குநிலை மற்றும் ஆவணப்படுத்தலுக்காக ஓர் ஆர்வலருக்கு 1 லட்சம் ரூபாய் மானியத்தையும், இடமாற்றச் செலவுகளுக்காக கூடுதலாக 50,000 ரூபாய் மானியத்தையும் அசாம் அரசு வழங்குகிறது.
- அசாம் அரசானது, பங்கேற்பின் அடிப்படையில் 1 லட்சமாக உயர வாய்ப்புள்ள 50,000 வேலை வாய்ப்புகளின் ஆரம்ப இலக்கைப் பெற்றுள்ளதுடன், இந்தியாவும் ஜப்பானும் 2030 ஆம் ஆண்டிற்குள் 5 லட்சம் இந்தியத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்க ஒப்புக் கொண்டுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★